வசமாக அப்படி பரோலில் தாராளமாக வெளியே சென்றவர்களால் 165 பேர் தலைமறைவாகிவிட்டார்கள். இதுவரையில் அவர்கள் சிறைச்சாலைக்கு வரவில்லை. மேலும் வெளியே சென்றவர்கள் பல கொலைகளையும் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாகத் தான் தற்போது நடவடிக்கை சற்று கடுமையாக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-40)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றத்தின் அடிப்படையில் அந்த ஜாமீன்களுக்கு சொத்து ஜாமீன் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண வழக்குகளுக்கு, செக்ஷன் 75 என்று சொல்லக்கூடிய சண்டை கேஸ்களுக்குக்கூட இந்த சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். இதுபோன்ற சிறு சிறு வழக்குகளுக்கெல்லாம் இந்த சொத்து ஜாமீன் அளிக்கப்படுவது நிவர்த்திக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான். இதுபற்றி அகில இந்திய அளவிலே ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். மைய அரசு அப்படி ஒரு முடிவு எடுக்குமானால் அனைத்து மாநிலங்களிலும் சரியாக அதை அமல் நடத்த முடியும். அதற்குத்தான் அரசு ஆயும் என்று ஏற்கனவே சொன்னேன்.

கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பாடம்.

293—(* வினா எண் 9774) திரு. மு. தங்கமணி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பாடம் கட்டாயமாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பாடம் கட்டாயமாக்குதல் குறித்து தற்போது கருத்துரு இல்லை. ஆனால் அதை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எந்த அளவுக்கு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று ஆய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

1987 ஏப்ரல் 4]

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் சொல்கிறபோது கட்டாயம் ஆக்கும் கருத்துரு இல்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் கணக்குகளைத் துல்லியமாகச் செய்ய இப்படிப்பட்ட கருவிகளால் முடியும் என்ற வகையில் கம்ப்யூட்டர் பற்றி கல்லூரிகளில் பாடமாக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு இப்போது கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் எப்படி கம்ப்யூட்டர் பாடம் நடத்தப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்ப்யூட்டர் எலக்ட்ரானிக் சைன்ஸைப் பொறுத்தவரையில் அதனுடைய இன்றியமையாத தேவையை உணர்ந்து, இன்றைக்கு வேகமாக வளர்ந்து வருகிற அறிவியல் உலகில் அது அவசியம் தேவை என்ற காரணத்தால், அது தீவிரமாகத் தேவை, தொழிற் கல்லூரிகளில் மட்டுமல்ல, கலைக் கல்லூரிகளிலும் கொண்டு வரவேண்டும் என்று அரசு ஒரு முடிவு எடுத்து பல்கலைக் கழகத்திடம் வற்புறுத்தி ஆங்கும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுகளிலிருந்து எல்லாப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் பாடமாகக் கொண்டு வரப்படும். அதை எந்த அளவிற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி, சென்னை பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் சுந்தரேசன், பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் சுப்பையன் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் எந்த அளவுக்குச் செய்ய வேண்டும் என்பதை ஆராயவேண்டும் என்று குழுவிற்குப் பணிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை 3 மாத காலத்தில் வரும். வந்தபிறகு எந்தெந்தப் பாடத் திட்டத்தை எந்த அளவில் கொண்டு வரவேண்டும் என்று அரசு முடிவு செய்யும்.